// பதிவஞ்சல் ஒப்புகையுடன் //

பள்ளிக் கல்வி ஆயையரகம்

பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) அவர்களது
செயல் முறைகள், சென்னை-6.
பிறப்பிப்பவர்: முனைவர். பூ.ஆ. நரேஷ்.,

ந.க.எண்: 14330 / ஜே / இ4 / 2021 நாள்:23.09.2021.

..............

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி கருணை அடிப்படையில் நியமனம் – கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை கல்வி மாவட்டம், பளுகல், அரசு மேல் நிலைப்பள்ளில் உதவியாளராகப்பணிபுரிந்து 10.05.2006-ல் பணிக்காலத்தில் காலமான திரு.அ.சுவாமிதாஸ் என்பவரின் வாரிசுதாரர் திரு.S.V. பெகின் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளரார் பணி நியமனம் செய்யப்பட்டது – 04.10.2018 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து – ஆணையிடல்.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை நாள். 01.08.2018.
2. தமிழ் நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) ன் செ.மு.ந.க.எண்.487/ஜே4/2018 நாள்.01.10.2018
3. அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை நாள். 26.02.2021.
4. கன்னியாகுமரி (இ) நாகர்கோவில், முதன்மைக் கல்வி அலுவலரின் செ.மு. ந.க.எண்.10140/அ1/2018 நாள்:01.10.2018
5. கன்னியாகுமரி (இ) நாகர்கோவில், முதன்மைக் கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண்.4552/அ1/2020 நாள்:20.02.2021

---

ஆணை:-

பணியில் இருக்கும் போது காலமான அரசுப்பணியாளர்களின் வாரிசுதாரருக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கும் திட்டப்படி, திரு. S.V. பெகின் என்பவர் இளநிலை உதவியாளராக கன்னியாகுமரி (இ) நாகர்கோவில், முதன்மைக் கல்வி அலுவலரின் செயல் முறைகள் ந.க.எண்.10140/அ1/2018 நாள்.01.10.2018-ன்படி தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக் கல்வித் துறையில் 04.10.2018 முற்பகல் முதல் தற்காலிக பணியமர்த்தப்பட்டுள்ளார்.

த.பி.பா.

தற்காலிகமாக பணி அமர்த்தப்பட்டவரின் தந்தையார் திரு.அ.சுவாமிதாஸ் என்பவர் கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை கல்வி மாவட்டம், பளுகல், அரசு மேல் நிலைப்பள்ளியில் உதவியாளராக பணிபுரிந்த போது பணிக்காலத்தில் 10.05.2006 அன்று காலமானார் என்றும், அவர் தகுதிகாண் பருவம் முடித்தவர் என்றும், அவரது குடும்பம் வறிய சூழ்நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு. S.V. பெகின் என்பவர் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கேட்டு 06.11.2006 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த நாள் 28.09.1982 என்றும், அவர் இடைநிலைக்கல்வி (எஸ்.எஸ்.எல்.சி) பள்ளிறுதி வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்கு பணிவாய்ப்பு வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் பார்வை5-ல் குறிப்பிட்ட கடிதத்தில் கன்னியாக்குமரி (இ) நாகர்கோவில், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் தெரிவித்து, அன்னாரின் பணியினை வரன்முறை செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்கண்ட நிலையில், கன்னியாகுமரி (இ) நாகர்கோவில், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் பரிந்துரையின் அடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை கல்வி மாவட்டம், பளுகல், அரசு மேல் நிலைப்பள்ளியில் உதவியாளராக பணிபுரிந்த திரு.அ.சுவாமிதாஸ் என்பவரின் வாரிசுதாரர் திரு. S.V. பெகின் என்பார் பார்வை3-ல் உள்ள அரசாணையில் நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணிநியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ள நிலையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில், பள்ளிக் கல்வித் துறையில் இளநிலை உதவியாளர் பதவியில் 04.10.2018 முற்பகல் முதல் நியமனம் பெற்று பணிபுரிந்து வரும் நிலையில் அப்பணியிடத்திற்குரிய உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், அன்னார் பணியில் சேர்ந்த நாளான 04.10.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியில் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

த.பி.பா.

நிபந்தனைகள்:

1. தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள் 32எ(1)–ன்படி இளநிலை உதவியாளர் பதவியில் தொடர்ந்து மூன்றாண்டு காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவதை முடிக்க வேண்டும்.

2. தகுதிகாண் பருவ காலத்தில் இரண்டாண்டுக்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு மற்றும் பவானி சாகர் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும்.

இவ்வாணை குறித்து உரிய பதிவுகள் சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

இணைப்பு: அசல் கல்விச் சான்றுகள்
மற்றும் பணிப்பதிவேடு தொகுதி–1.

இணை இயக்குநர், (பணியாளர் தொகுதி)

பெறுநர்:

திரு. S.V. பெகின்,
இளநிலை உதவியாளர்,
அரசு மேல் நிலைப்பள்ளி,
முஞ்சிறை,
கன்னியாகுமரி மாவட்டம்.
அ.கு.எண். 629171.

நகல்: மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர், கன்னியாகுமரி (இ) நாகர்கோவில்.

நகல்: கோப்பிற்கு.